**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – அறிவிப்புகள் – 2023-2024 – 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் – உணவூட்டு செலவினம் – ரூ.42/-லிருந்து ரூ.100/-ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-1.1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.10

நாள்: 01.06.2023,
சோபகிருது, வைகாசி – 18,
திருவள்ளுவர் ஆண்டு, 2054.

படிக்கப்பட்டது :

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 17.04.2023.
2. அரசாணை (நிலை) எண்.09 மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை நாள். 03.02.2015.
3. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரக ந.க.எண்.2534/மஇநிர்.3/2023, நாள் 20.04.2022.

******

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2022-2023ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, 17.04.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிப்பினை வெளியிட்டார்:-

> **"மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் கீழ் செயல்படும் பத்து அரசு மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்து, தங்கியுள்ள 592, மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் உணவூட்டு மானியத்தினை ரூ.42/- லிருந்து ரூ.100/- ஆக உயர்த்தி, ஆண்டுக்கு ரூ 124.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்".**

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசாணை (நிலை) எண்.09 மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை நாள். 03.02.2015, 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் ஒரு அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கத்தில் தங்கியுள்ள பெரியவர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த உணவூட்டு செலவினத்தை ரூ.25/- லிருந்து ரூ.42/- ஆக உயத்தியும், சிறுவர்களுக்கு ரூ.21.66 லிருந்து ரூ.37/- ஆக உயர்த்தி வழங்கியும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் உணவூட்டு செலவின அரசாணை (நிலை) எண்.9 மாற்றுத் திறனாளிகள் நலத்துறை நாள்,15.02.2015, வெளியிடப்பட்டு சுமார் 8 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் மளிகை பொருட்கள், காய்கறிகள், பால், ஆட்டிறைச்சி, முட்டை மற்றும் எரிவாயு உருளைகள் என அனைத்து பொருட்களின் விலை மிகவும் கூடுதலாக உயர்ந்து உள்ளது என்றும் இந்நிலையில் நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு ரூ.42/- மற்றும் சிறியவர்களுக்கு ரூ.37/- லிருந்து உணவூட்டு செலவினத்தினை மேற்கொள்ள சிரமமாக உள்ளதாகவும், அதனை உயர்த்தி வழங்ககோரி கோரிக்கை வரப்பெற்றன என தெரிவித்துள்ளார்.

4. மேலும், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களிலும் உள்ள இல்லவாசிகளுக்கு வாரம்தோறும் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சி வழங்கப்பட்டு வருகிறது என்றும் இனிவரும் காலங்களில் ஞாயிற்றுக்கிழமையும் ஆட்டிறைச்சி வழங்கப்படும் என்றும் வாரம் இருமுறை புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆட்டிறைச்சி வழங்கப்படும் என தெரிவித்துள்ளது. மேற்படி, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் பெரும்பாலும் வயதானவர்கள் என்பதால், அவர்களுக்கு வெளிஉணவோ அல்லது வேறுசத்துள்ள உணவுகளோ கிடைக்க பெரிதும் வாய்ப்பில்லாமல் உள்ளனர் என்றும் தமிழக அரசு இலவசமாக வழங்கும் உணவினையே நம்பி இல்லவாசிகள் ஆயுட்காலம் வரை இல்லத்தில் வசித்து வருகின்றனர் என்றும் அவர்கள் உட்கொள்ளும் மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள உணவினை வழங்குவது அவசியமாகிறது.

5. இந்நிலையில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த இல்லவாசிகளுக்கு உணவூட்டு செலவினம் ரூ.42/-லிருந்து ரூ.100/- ஆக உயர்த்தி வழங்கினால் மட்டுமே விலைவாசி ஏற்றத்தினை சமாளிக்க ஏதுவாக அமையும் என்பதால் அவ்வில்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு சத்தான மற்றும் உரிய அளவில் உணவு வழங்க வேண்டியது அவசியமாகிறது என்றும், மேலும் மேல்பாக்கம் அரசு மறுவாழ்வு இல்லத்தில் தற்போது இல்லவாசிகள் இல்லாமையால் அதற்கான நிதி ஒதுக்கீடு தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளது.

6. தற்போது, 2022-2023 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதி ஒதுக்கீட்டில் ஒரு இல்லவாசிக்கு ஒரு நாளைக்கு ரூ.42 வீதம் 592 இல்லவாசிகளுக்கு மொத்தம் ரூ.99,86,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள இல்லவாசிகள் அனைவருக்கும் உணவூட்டு செலவினம் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.42/-லிருந்து ரூ.100/- ஆக உயர்த்தி வழங்கினால் மொத்தமுள்ள 592இல்லவாசிகளுக்கு, கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படி ஆண்டுக்கு கூடுதலாக ரூ.1,23,60,960/- செலவினம் ஏற்படுகிறது.

| 2023-2024 ஆம் நிதியாண்டில் ஏற்கனவே உள்ள ரூ.42/- க்கான தொகைக்கு உணவூட்டு செலவினம் | தற்போது 2023-2024 நிதியாண்டில் ரூ.100/ க்கான உணவுட்டு செலவினத் தொகை உயர்த்தப்பட்ட பிறகு. | கூடுதல் செலவினம் ஒரு ஆண்டிற்கு |
|---|---|---|
| 592 நபர்கள் ரூ.42x 30 நாட்கள் x 12 மாதங்கள் =ரூ.89,51,040/- | 592 நபர்கள் x ரூ.100/-x 30 நாட்கள் x 12 மாதங்கள் = ரூ.2,13,12,000/- | ரூ.1,23,60,960/- |
| ரூ.89,51,040/- | ரூ.2,13,12,000/- | ரூ.1,23,60,960/- |

மேலும், 2023-2024 ஆம் ஆண்டு மொத்த செலவினம் ரூ.2,13,12,000/- இல்லவாசிகளின் நலனை கருத்தில் கொண்டு 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள அனைத்து இல்லவாசிகளுக்கு உணவூட்டு செலவினம் ரூ.42/-லிருந்து ரூ.100/- ஆக உயர்த்தி ஆணை வழங்குமாறு அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

7. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களுக்கு உணவூட்டு செலவினம் ரூ.42/-லிருந்து ரூ.100/-ஆக உயர்த்தி வழங்கியும், இத்திட்டத்திற்கு, ஆண்டிற்கு கூடுதல் தொடர் செலவினமாக ரூ.1,23,60,960/-க்கு நிர்வாக அனுமதியும் நடப்பாண்டுக்கு ரூ.1,02,95,920/- (ரூபாய் ஒரு கோடியே இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் இச்செலவினத்தை ஆணை வெளியிடும் நாள்முதல் கணக்கிட்டு வழங்க மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி-7ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 – சமூக நலன் - 104 – முதியோர், இயலாமையற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – மாநிலச் செலவினங்கள் - AI தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் – 367 - உணவளிக்கும் உணவுச் செலவுகள் – 09 - ஏனையவை"
> **(IFHRMS த.தொ.கு.2235-02-104-AI-36709)**

9. மேலே பத்தி 7-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,02,95,920/- 2023-2024ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினம் 2023-2024ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சிறப்பு நிகழ்வாக

கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும் இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 7ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலே பத்தி 7ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2023-2024ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் / துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (சந/வ.செ.பொது.I) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.20890/ நிதி(சந)/2023, நாள்01.06.2023-இன் இசைவுடன் பெறப்பட்ட வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.192 (நூற்று தொண்ணூற்று இரண்டு). (IFHRMS ASL No.2023060192)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. ஆனந்தகுமார்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை-5. (வழி)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலரின் தனிச் செயலர்,
மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந/வ.செ.பொது-I,II/வ.வ.I)துறை, சென்னை-9.
திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பிரிவு அலுவலர்
16/06/23